# <u>சுவாமியே சரணம் ஐயப்பா</u>

*சுவாமியே சரணம் ஐயப்பா*
*என்ற திவ்விய நாமத்தை சொன்னவர்க்கே*
*தர்மசாஸ்தா அருள் உண்டு திண்ணமாக*
*எண்ண மெல்லாம் ஐய்யன் மேல் வைத்து*
*அந்த கண்ணன் மகன் ஆலயத்தை வலம் வந்தவர்க்கே*

*சர்வ மங்களம் உண்டாககும் சத்தியமான*
*பொன்னு பதினெட்டு படி மேல் ஏறி*
*ஐய்யன்  தரிசனத்தைக் காண வந்த சாமிமாரே*
*ஐயப்ப சாமிமாரே*

*சாமியே சரணம்* (2) *சரணம் பொன்னையப்பா*
*சாமி இல்லா தொரு*
*ஐயப்ப கடவளே*
*ஐயப்ப சரணம்*
*அற்புத விக்ரகா*
*அகிலாத தாரா*
*அனாத குகனே*
*ஆனந்த மோகனா*
*அச்சன் கோயில் அரசே*
*கற்பூர ஜோதியே*
*சரணகோஷ ப்ரியனே*
*கண்கண்ட தெய்வமே*
*கலியுக வாரதனே*
*ஹரி ஹார சுதனே*

அன்னதான ப்ரபுவே
ஏழைகளின் நாயகா
ஐயப்ப தெய்வமே
மன்மத வாசனா
பக்தஜன ப்ரியனே
வில்லாலி வீரனே
தேவாதி தேவனே
இருமுடி ப்ரியனே
பானக ப்ரியனே
எறிமேலி சாஸ்தா
உமையால் சுதனே
உலகம் போற்றும் சாமியே
ஐயப்ப தெய்வமே
வனவாச ப்ரியனே

ஒன்றாம் திருப்படி சரணம் பொன்னையப்பா
இரண்டாம்
மூன்றாம்
நான்காம்
ஐந்தாம்
ஆறாம்
ஏழாம்
எட்டாம்
ஒன்பதாம்
பத்தாம்
பதினொன்றாம்
பனிரெண்டாம்
பதிமூன்றாம்
பதிநான்காம்
பதினைந்தாம்
பதினாறாம்
பதினேழாம்
பதினெட்டாம்

# உருவாக அருள்வாக

உருவாக அருவாக
குருவருள்வாக
ஒவ்வொருவர் கரங்களிலும் திருவுருவாக
வருவானே எளிமையான வாகனத்தாலே
அந்த வானவரும் தாள் பணியும் வளர்மதி யானை

முகம் யானை வயிர் பானை
அந்த பார்வதி மகனை
பணிவோனே தொழுவோனே
அனுகாது ஊழ்வினை

(உருவாக)

பாரதத்தை எழுதி வைத்த ஏகதந்தனாம்
ஔவை பாட்டியை கைலாயம் கூட்டிப் போனவனாம் (2)
ஏகதத்து கந்தநனுக்குத் தூது சென்றவனாம் (2)
அந்த ஈஸ்வரணின் பெயரைக்கூட
என்னவென்றவனாம் (2)

காலம் என்னும் தேர் நடத்தும் சாரதி அவனாம் (2)
பூத கனங்களுக்கெல்லாம் அதிபதி அவனாம்
முழு முதல் பொருளான கணபதி அவனாம்
ஞானம் முழுவதுமே நிறைந்திருக்கும்
குணநிதி அவனாம் (2)

(உருவாக)

# <u>விநாயகர் வணக்கம்</u>

*விநாயகனே வெல்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான்- விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாய்*
*தன்மையினால் கண்ணிற்பணி மின் கனிந்து* (2)

*விநாயகனே வினை தீர்ப்பவனே*
*வேழ முகத்தோனே ஞான முதல்வனே*
(விநாயகனே)
*குணாநிதியே குருவே சரணம்*
*குறைகள் களைய இதுவே தருணம்* (2)
(விநாயகனே)

*உமாபதியே உலகம் என்றாய்*
*ஒரு சுற்றினிலே வலமும் வந்தாய்*
*கணநாதனே மாங்கனியை உண்டாய்*
*கதிர் வேலவனின் கருத்தில் நின்றாய்* (2)
(விநாயகனே)

# சொல்லாத நாளில்லை சுடர்மிகு வடிவேலா

சொல்லாத நாளில்லை சுடர்மிகு வடிவேலா
சுவையான அமுதே செந்தமிழாலே - உன்னை
சொல்லாத நாளில்லை சுடர்மிகு வடிவேலா.........

கல்லாத எளியோரின் உள்ளம் ஒரு ஆலயமோ (2)
கடலாறு படைவீடும் நிலையான ஜோதி - உன்னை

(சொல்லாத)

இன்பமும் துன்பமும் இனைந்த என் வாழ்வில் (2)
இணையில்லாத நின் திரு புகழினை நான் பாட
அன்பும் அறநெறியும் அறமும் புரமும் நாட
அரகர சிவகுரு மால்முருகா
என அனுதினம் ஒரு முறை பாடிடுவேன் - உன்னை
(சொல்லாத)

# சாமி சரணம் சரணம் என் ஐயப்பா

சாமி சரணம் சரணம் என் ஐயப்பா
சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா
ஹரிஹர சுதனே அருள் செய் என் ஐயப்பா
அடைக்களம் நீ இன்றி வேறேதும் இல்லையப்பா
(சாமி-cho)

இருமுடி தாங்கிய தலை ஒரு கோடி
கோடியும்மே உன்னை தேடி
அருள் பெற திருத்தலம் வந்தோம் நாடி (2-cho)

எருமேலி தன்னில் ஒரு பேட்டை துள்ளி
ஒருமக்கள் போல் வந்தோம் ஐயப்பா

ஐயப்பா சாமி ஐயப்பா
ஐயப்பா சாமி ஐயப்பா (cho)

(சாமி-cho)

அழுதை எனும் நதி தனில் தலை மூழ்கி
அங்கிருந்து இரண்டு கல் எடுத்து
அதை அந்த கல்லிடங் குன்றினில் விடுத்து (2-cho)

கரிமலை ஏறி ஹரிஹர பாடி
வந்தோம் ஆனந்தோம் தொடுத்து (2-cho)

*ஐயப்பா சாமி ஐயப்பா*
*ஐயப்பா சாமி ஐயப்பா* (cho)

(*சாமி*-cho)

*பம்பையில் குளியிட்டு பஜனைகள் பாடி*
*பக்தியுடன் உணவருந்தி*
*அங்கொரு பம்பா விளக்கினை நகற்றி* (2-cho)

*சபரி பீடம் கண்டு சரங்குத்தி ஆடிட*
*ஒருதாயின் மைந்தர்கள் வந்தோம்* (2-cho)

*ஐயப்பா சாமி ஐயப்பா*
*ஐயப்பா சாமி ஐயப்பா* (cho)

(*சாமி*-cho)

*தைமுதல் தேதி திருப்பொங்கல் நாளில்*
*சுவாமி நின் வாசலை தேடி*
*உனதொரு பெருமையில் மாந்தர்கள் ஆடி* (2-cho)

*பதினெட்டு படி கண்டு கோவிலில் சென்று*
*பரவசமானவர் கோடி* (2-cho)

*ஐயப்பா சாமி ஐயப்பா*
*ஐயப்பா சாமி ஐயப்பா* (cho)

(*சாமி*-cho)

*சாமி சரணம் சரணம் என் ஐயப்பா* (2-cho)
*சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா* (2-cho)

*ஹரிஹர சுதனே அருள் செய் என் ஐயப்பா* (2-cho)
*அடைக்களம் நீ இன்றி வேறில்லையப்பா* (2-cho)

*சாமி சரணம் சரணம் என் ஐயப்பா*
*சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா* (2-cho)

# பேட்டை துள்ளி

பேட்டை துள்ளி ஆடும் போதும்
பாட்டு பாடுங்கோ
பெருமானின் சரண சத்தம் போட்டு ஆடுங்கோ
வாட்டம் போடும் ஐயன் மருந்து தானுங்கோ
படி அழைத்தால் ஐயப்பனும் பறந்து வருவாங்கோ

பம்பா நதி கரையினிலே வாசம் செய்பவனாம்
சம்போ மகாதேவனின் சக்தியை பெற்றவனாம்
அன்பாக அழைத்தாலே அகம் மகிழ்பவனாம் (2)
அல்லும் பகலும் அடியாரின் அருகில் இருப்பவனாம்

(பேட்டை)

பத்தோடு எட்டு படி மேல் இருப்பவனாம்
பற்றோடு பணிவோர்க்கு பக்கம் இருப்பவனாம்
முத்தான தமிழ் பாட்டில் மோகம் கொல்பவனாம் (2)
மகர ஜோதி வடிவில் காட்சி தருபவனாம்